

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் 7000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 13.97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்தார். மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 332 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் நேற்று தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கோரிக்கையை ஏற்று – முதல்வர் அறிவிப்பு!

# வள்ளியூர் - திசையன்விளையில் - கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்!

### அரசாணை வெளியீடு! முதல்வருக்கு – பொதுமக்கள் – வழக்கறிஞர்கள் நன்றி!

சென்னை, டிச.11 -

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனும் பேரவைத் தலைவரும், இராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்பாவு அவர்களின் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, சட்டமன்றத்தில் சட்டத் துறை அமைச்சர் மூலம் அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திறப்பதற்கான அரசானை அறிவிப்பினை தற்போது வெளியிட்டுள்ளார்கள். அதுபோல், பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திசையன்விளையிலும், Cumcourt திறப்பதற்கு ஏற்கெனவே அரசாணை அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நீதிமன்றங்களையும் திறப்பதற்கு அரசாணை அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, மிக விரைவிலேயே இரண்டு நீதிமன்றங்களும் திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

### சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ்

# கள்ளக்குறிச்சி தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

### மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, டிச.11-

“சமக்ரா சிக்ஷா” திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து மக்களவையில் கழக உறுப்பினர் தே. மலையரசன் எழுப்பிய கேள்வி வருமாறு:-

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் அம்சங்கள் மற்றும் நோக்கங்கள் கடந்த நிதியாண்டுகளில் தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதியில், இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட மொத்த நிதிகள் எவ்வளவு?

அனுமதிக்கப்பட்ட நிதியில் பெரும்பகுதி இன்னும் அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அப்படியானால், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதியின் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் என்ன?

நிலுவையில் உள்ள மொத்த நிதி மற்றும் வழங்குவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு.?

தமிழ்நாட்டிற்கு நிதி சரியான நேரத்தில் வெளியிடப்படுவதை உறுதி செய்வதற்கும், செயல்படுத்தலில் உள்ள ஏதேனும் சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.


